**செய்தி வெளியீடு எண் : 1403** **நாள்:24.12.2021**

## செய்தி வெளியீடு

**விவசாய பெருமக்கள் பயன்பெறும் வகையில் ரூ.9.24 கோடி மதிப்பில் சூரிய கூடார உலர்த்திகள், சூரிய மின்வேலி, சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் மற்றும் வேளாண் விளை பொருட்களை மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வழங்கும் திட்டங்கள் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (24.12.2021) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை பொறியியல் துறை சார்பில் ரூ.9.24 கோடி மதிப்பில் 672 விவசாய பெருமக்கள் பயன்பெறும் வகையில் சூரிய கூடார உலர்த்திகள் அமைத்தல், சூரிய மின்வேலி அமைத்தல், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்தல் மற்றும் வேளாண் விளை பொருட்களை மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வழங்குதல் ஆகிய திட்டங்களை துவக்கி வைக்கும் அடையாளமாக, 9 விவசாயிகளுக்கு வழங்கி, தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இயற்கையாக கிடைக்கக் கூடிய சூரிய சக்தியினைப் பயன்படுத்தி விவசாயத்தில் பல்வேறு பணிகளை மேற்கொள்ளவும், குறிப்பாக பாசனநீரினை இறைப்பதற்கும், வேளாண் விளைபொருட்களை உலரவைப்பதற்கும், பயிர்களை விலங்குகளிடமிருந்து பாதுகாக்கவும் உரிய தொழில்நுட்பங்களை வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி அவற்றை மானிய விலையில் வழங்கிட வேளாண்மை – உழவர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பு 2021-22ல் தெரிவித்தப்படி கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

### சூரிய கூடார உலர்த்திகள் அமைக்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்களுக்கு எண்ணெய் வித்துக்கள், பழவகைகள், வாசனை பொருட்கள் மற்றும் மூலிகை செடிகள் போன்ற பல்வேறு வேளாண் விளைபொருட்களை உலர வைத்திட, பசுமைக்குடில் வகையிலான 400 முதல் 1,000 சதுரஅடி பரப்பு கொண்ட பாலிகார்பனேட் தகடுகளாலான சூரிய கூடார உலர்த்திகள் அமைத்து தரப்படும். நடப்பாண்டில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 115 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சூரிய கூடார உலர்த்திகள் அமைக்கப்பட உள்ளது. சூரிய கூடார

உலர்த்திகள் அமைக்க ஏற்படும் செலவில் 40 சதவிகித மானியம் விவசாயிகளின் வங்கி கணக்கில் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.

**<u>சூரிய மின்வேலி அமைக்கும் திட்டம்</u>**

இத்திட்டத்தின் கீழ், மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு இடையே ஏற்படும் மோதலைத் தவிர்க்க வழிவகை செய்திடவும், விவசாயிகளின் விளை நிலங்களில் உள்ள பயிர்களை ஆடு, மாடு, காட்டுப்பன்றி, காட்டெருமை, மான், யானை போன்ற விலங்குகளிடமிருந்து பாதுகாத்திடவும், மானிய விலையில் சூரிய மின்வேலி அமைக்கப்படும். யானைகள் தவிர்த்த பிற விலங்குகளுக்கான வேலி அமைப்பு 5 வரிசை, 7 வரிசை மற்றும் 10 வரிசை வேலி கம்பிகளைக் கொண்டு அமைக்கப்படும். யானைகளை விரட்டிட கூடுதலாக தொங்கும் மின்வேலி அமைப்பு 5 வரிசை, 7 வரிசை மற்றும் 10 வரிசை வேலி கம்பிகளைக் கொண்டு அமைக்கப்படும். ஒரு விவசாயி அதிகபட்சமாக 2 எக்டர் பரப்பிற்கு, 566 மீட்டர் நீளம் வரை மானிய உதவிக்கு தகுதியுடையவர் ஆவார். நடப்பாண்டில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் 130 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சூரிய மின்வேலி அமைப்புகள் அமைக்கப்பட உள்ளது. சூரிய மின்வேலி நிறுவுதல் செலவில் 40 சதவிகித மானியம் விவசாயிகளுக்கு அவர்களின் வங்கி கணக்கில் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.

**<u>சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் அமைக்கும் திட்டம்</u>**

இத்திட்டத்தின் கீழ், விவசாயிகளின் இறவை பாசனத்திற்கான மின்சார தேவையினை உறுதி செய்திடவும், விவசாயிகளின் இறவை பாசன அமைப்பிற்கான பராமரித்தல் மற்றும் தொடர் செலவினத்தை குறைத்து, நீடித்த நிலையான வேளாண் உற்பத்தியினை பெறுவதற்கும், மின்கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் விவசாயிகளுக்கு மானியத்துடன் அமைத்துத் தரப்படும்.

நடப்பாண்டில் முதற்கட்டமாக 3 கோடியே 81 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 70 சதவிகித மானியத்தில் 171 விவசாயிகளுக்கு சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைக்கப்படவுள்ளது.

**<u>வேளாண் விளை பொருட்களை மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வழங்கும் திட்டம்</u>**

இத்திட்டத்தின் கீழ், விவசாயிகள் தங்கள் விளைபொருட்கள் வீணாவதை குறைத்திடவும், அவற்றின் சேமிப்புக்கால அளவினை அதிகரிக்கவும், மதிப்பினை கூட்டவும்,

வேளாண் விளைபொருட்கள் மதிப்பு கூட்டும் இயந்திரங்கள் மானியத்தில் வழங்கப்படும். அதன்படி, வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டும் இயந்திரங்களான சிறிய பருப்பு உடைக்கும் இயந்திரம், சிறுதானியங்களில் உமி நீக்கும் இயந்திரம், எண்ணெய் பிழியும் செக்குகள், பைகளில் அடைக்கும் இயந்திரங்கள், நிலக்கடலை உடைக்கும் இயந்திரங்கள், அரவை இயந்திரங்கள், மெருகூட்டும் இயந்திரங்கள், சுத்தப்படுத்தி தரம் பிரிக்கும் இயந்திரங்கள் போன்றவற்றினை தனிப்பட்ட விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், விவசாய பயன்பாட்டு குழுக்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் வாங்குவதற்கு 40 சதவிகித மானியம் வழங்கப்படும். நடப்பாண்டில் ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் 256 விவசாயிகளுக்கு வேளாண் விளை பொருட்களை மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளது.

மேற்கண்ட திட்டங்கள் சென்னையை தவிர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டங்களின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் https://mis.aed.tn.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக திட்டங்கள் பற்றிய விவரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை செயலாளர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., வேளாண்மை இயக்குநர் திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப., வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை) திரு. ஸ்ரவன் குமார் ஜடாவத், இ.ஆ.ப., வேளாண்மைப் பொறியியல் துறை தலைமை பொறியாளர் திரு. இரா. முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**